# ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற இந்திய சமூக நிகழ்ச்சியான “அஹ்லான் மோடி” நிகழ்ச்சியில் பாரத பிரதமரின் உரையாடல்

பிப்ரவரி 13, 2024

1. பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்திய சமூகத்தினரால் அவரது நினைவாக ஏற்பாடு செய்யப்பட்ட “அஹலான் மோடி” என்ற நிகழ்ச்சியில் உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் 7 அமீரக நாடுகளிலிருந்தும் புலம்பெயர்ந்த இந்தியர்கள் மற்றும் அனைத்து சமூகங்களைச் சேர்ந்த இந்தியர்களும் கலந்து கொண்டனர். இந்த பார்வையாளர்களில் அமீரகத்தை சேர்ந்த மக்களும் பங்கேற்றனர்.

2. அபுதாபியில் உள்ள சயீத் ஸ்போர்ட்ஸ் சிட்டி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக 40,000 பேர் கொண்ட அரங்கிற்குள் நுழைந்த பிரதமர் மோடி அவர்களுக்கு அங்கு சிறப்பான வரவேற்பு கிடைத்தது. இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இடையேயான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் புலம்பெயர்ந்தோர் இந்தியர்களின் பங்களிப்பு குறித்து பிரதமர் தனது உரையில் பகிர்ந்து கொண்டார். இந்திய சமூகத்தினர் மீதான கருணை மற்றும் அக்கறைகளுக்கு ஐக்கிய அரபு அமீரக அரசுக்கு பிரதமர் மோடி அவர்கள் நன்றிகளை தெரிவித்தார். குறிப்பாக, அவர் கோவிட் தொற்றுநோயின் கடினமான காலகட்டத்தில், வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டதை குறிப்பிட்டார். கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றிய தனது பார்வையையும் பிரதமர் பகிர்ந்து கொண்டார். மேலும், 2030 ஆம் ஆண்டுக்குள் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக மாறும் என்றும், 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடாக “விக்ஷித் பாரத்” என்ற தனது பாதையில் இந்தியா இருக்கும் என்ற நம்பிக்கையையும் பிரதமர் வெளிப்படுத்தினார். இந்தியா ஒரு "விஸ்வபந்து" என்றும், உலகளாவிய முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வுக்கு பங்களிப்பு செய்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

3. ஐக்கிய அரபு அமீரகத்தில் சுமார் 3.5 மில்லியன் இந்தியர்கள் வசித்து வருவதால், இங்கு உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான இந்தியர்கள் உள்ளனர். இந்த நிகழ்ச்சியை மறக்கமுடியாததாக மாற்ற

பல மாதங்களாக "ஆஹலான் மோடி" நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

**அபுதாபி**
**பிப்ரவரி 13, 2024**